Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

# The Personality of Thozhi in Sangam Literature

**Dr. T. Anitha Anilet,** Assistant Professor, Tamil Department, Muslim Arts College, Thiruvithancode, Kanyakumari, Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0008-5684-8453**
**DOI: 10.5281/zenodo.14744463**

## Abstract

*Sangam literature is the best form of literature in Tamil. Sangam songs reveal the lives of the people who lived at that time. In Sangam literature, the hero, the heroine, the heroine, the nurse, etc. are the best characters. The female companion (Thozhi) acts as a bridge for the love affairs between the hero and the beloved. In Sangam literature, the female companion acts as a supporting character. The female companion may be the daughter of the nurse. The female companion is depicted as a character centred around many people, such as the hero, the heroine the nurse, etc. The female companion is excellent in words and powerful in actions. Therefore, the female companion is special in both situations and is always proud and special in the songs. This essay on the female companion's personality in Sangam literature describes her multifaceted leadership. This paper also summarizes how the metaphysical concepts of beloved and female companions play a role in young life and chastity. It shows how the psychological feelings of the beloved and female companion are reflected in the psychological characteristics of the female friend's contribution in different hierarchical domains in life and chaste life. Therefore, this research article aims to explain the wisdom and intelligence of the female companion.*

**Keywords:** Personality, Thozhi, Thalaivi, Thalaivan, Sangam Literature.

## References

[1] Manickam, V. S. *Tamil Khadal.* Pari Nilayam, Chennai. 1962
[2] Sandhya Natarajan, (Ed). *Madurai Tamil Perakaradhi* - Volume One, Sandhya Publishing House, Chennai. First Edition - 2004.
[3] Shaw, George Bernard. *Getting Married.* Project Gutenberg, 2013.
[4] Robert B. White, Robert M. Cleveland. E*lements of Psychopathology: The Mechanisms of Defense,* Grune and Stratton, 1975.
[5] Periakaruppan, Ramasamy. *Tradition and Talent in Cankam Poetry*. Madurai Publishing House, Madurai, 1976.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*


*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

# சங்க இலக்கியத்தில் தோழியின் ஆளுமை

**முனைவர் த. அனிதா ஆனிலெட்**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, முஸ்லீம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு, கன்னியாகுமரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0008-5684-8453
DOI: 10.5281/zenodo.14744463

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க இலக்கியத்தில் தோழியின் ஆளுமை பற்றிய இக்கட்டுரையில் தோழியின் பன்முகத்தன்மை, தலைமையத்துவ பங்குப் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாய்வுசுருக்கத்தில் தோழியின் மனோதத்துவ உணர்வுகளான பெண் தலைமையத்துவம் மற்றும் செவிலித்தாய் ஆகியவை வயது வந்த வாழ்க்கை மற்றும் கற்பு வாழ்க்கை ஆகியவற்றில் எவ்வாறு பங்கு வகிக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. களவு வாழ்க்கையிலும், கற்பு வாழ்க்கையிலும் பல்வேறு வகைப்பட்ட படிநிலை களங்களுக்குள் தோழியின் பங்களிப்பு தலைவிக்கும் தோழிக்கும், தோழிக்கும் செவிலிக்கும், தோழிக்கும் தலைவனுக்குமென மனஉணர்வுகள் உளவியல் தன்மையோடு எவ்வாறெல்லாம் பிரதிபலிக்கிறது என்பது தான் இந்த ஆய்வின் சுருக்கமாகும்.*

**குறிப்புச்சொற்கள்:** ஆளுமை, தோழி, தலைவி, தலைவன், சங்க இலக்கியம்.

**முன்னுரை**

சங்க இலக்கியம் தமிழின் முன்னோடி இலக்கியமாகத் திகழ்கிறது. அவ்விலக்கியங்கள் அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையை வெளிக்கொணர்வதாக அமைகிறது. இலக்கியத்தில் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய் முதலானோர் மிகப் சிறந்த பாத்திரமாகின்றனர். தலைவன் தலைவி காதல் நிகழ்வுகளுக்குத் தோழி பாலமாகத் திகழ்கிறாள். சங்க இலக்கியங்களில் தோழி துணைப்பாத்திரமாகச் செயல்படுகிறாள். தோழி செவிலியின் மகள். தலைவன், தலைவி, நற்றாய், செவிலி எனப் பலரையும் மையமிட்டப் பாத்திரமாகச் சித்திரிக்கப்படுகிறாள் தோழி. சொல்லில் சிறந்தவளாகச் செயலில் வல்லவளாகத் தோழி விளங்குகிறாள். ஆகவே இரு நிலைகளிலும், பெருமையும், சிறப்பும் வாய்ந்தவள் தோழி என்பது சிறப்புக்குரியது. தோழியின் மதிநுட்பத்தையும், அறிவாற்றலையும் விளக்குவதாக இந்த ஆய்வு கட்டுரை அமைகிறது.

**'தோழி' சொல் விளக்கம்**

ஒரு பொருளைச் சுட்டப் பல சொற்கள் இருந்தாலும், அவற்றுக்கிடையே சிறிதளவு வேற்றுமை உண்டு என்பதை அறிவுடையோர் விளக்குகின்றனர். தலைவியின் துணைப்பாத்திரமான தோழியைக் குறிக்க இகுளை, சகி, இணங்கி, துணைவி, சிலதி, கேடி

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


எனப் பல சொற்கள் பல்வேறு கால நிலைகளில் வழக்கில் இருந்தன. இவற்றில் தோழி என்ற சொல்லே பழமைச் சிறப்புடையது. உதவி செய்யும் தன்மையுடையவள். தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியைத் தோழி பலமுறை ஆறுதல் கூறுவாள். தோழியின் அறிவுச் சிறப்புக் கூறப்படும் அளவிற்கு அழகுச் சிறப்புக் கூறப்படுவதில்லை.

**தோழியின் ஆளுமை**

தோழி அனைவருடனும் உரையாடுகிறாள். தலைவன், தலைவி, செவிலி ஆகியோரிடம் திறமையாக நடந்து கொள்கிறாள். பொறுமையோடு தன்னம்பிக்கை உடையவளாகக் காணப்படுகிறாள். தலைவியின் செயல்களில் விருப்பத்துடனும். ஆர்வத்துடனும் செயற்படுகிறாள். குறி, இடையீடு, வரைவு நீட்டித்தல், பிரிவுக்காலம் முதலான சூழ்நிலைகளில் ஏற்றங்களையும். இடர்களையும் தக்கமுறையில் எதிர்த்துப் போராடுகிறாள். எனவே, தோழி ஆளுமைப் பண்பு சிறந்தவளாகவும், தலைவியின் இல்லற மாண்பிற்குப் பெருந்துணை புரிபவளாகவும் அமைகிறாள். தோழியிடம் பணிவுடைமை, நட்புணர்வு, எந்த நிலையையும் சமாளிக்கும் திறன், தோல்வியில் கலங்காது நிற்கும் மனநிலை ஆகிய சமுதாய உளபாங்குப் பண்புகளும், பொறுப்புணர்ச்சி, தன்னம்பிக்கை, அறிவுடைமை ஆகிய தனிமனித உளப்பாங்கு பண்புகளும் அமைந்துள்ளன.

**தோழியின் செயல்திறன் களவு**

துறைதோறும் தோழி தலைவி உறவு நிலையைத் தெரிவிக்கும் பாங்கில் சிறப்பு நிலையில் ஆராயப்படுகிறது. தோழிக்கும் தலைவிக்கும் இடையே உள்ள அன்புநிலை, ஒருவர்க்கொருவர் அழைக்கும் நிலையில் அவர்களிடையே நிலவும் உறவுநிலை, தோழி தன்னைத் தலைவியாகவே பாவிக்கும் நிலை, இன்ப துன்பங்களில் இருவரும் பங்குபெறும் நிலை எனப் பொது நிலைகளிலும் அமைகிறது.

**வரைவு கடாதல்**

தொல்காப்பியர் வரைவு கடாதலைக் களவியலிலும் பொருளியலிலும் விரித்துக் கூறுகிறார். இதனை.

**...வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்**
**தன்னை அழிதலும் அவன்ஊறு அஞ்சலும்**
**இரவினும் பகலிலும் நீவாஎன்றலும்**
**கிழவோன் தன்னை வாரல் என்றலும்**
**நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும்**
**புரைபட வந்த அன்னவை பிறவும்**
**வரைதல் வேட்கைப் பொருள என்ப (தொல்., 1156)**

என்று *தொல்காப்பியம்* கூறுகிறது. தலைவன், பின்னர் கிடைக்க இயலாத களவின்பம் நீட்டிக்க ஆசைப்படுகிறான். சிறிது இன்பம் கிடைத்தவுடனே அதிலேயே ஈடுபட்டு இருக்க

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

விரும்புகிறான். தோழியோ அதைக் கடந்து இவ்வின்பம் நாள்தோறும் கிடைப்பதற்குத் தூண்டுகிறாள். சமுதாயத்தில் பெண்மைக்குத்தான் கற்பு என வரையறுக்கப்பட்டதால், தலைவி தன் கற்பிற்காக அஞ்சுகிறாள். இயற்கையும் பெண்மைக்கே கேடு விளைப்பதால் தலைவி அச்சம் கொள்கிறாள். ஊரில் உள்ள பெண்டிரும் ஆடவனை விட்டுவிட்டு பெண் மீதே அலர் தூற்றுகின்றனர். பெண்மையின் மென்மையான உள்ளம் தலைவன் வரும் வழியே நினைத்து அஞ்சத் தலைவன் அதை வீரமாகக் கொள்கிறான். பெண்மை காதலைத் தவிர வேறு அறியாததால் ஆற்றாமை கொள்ள தலைவன் தன் வாழ்வில் காதல் ஒரு பகுதியாக இருக்க வரைவு நீடிக்கிறான். நொதுமலர் வரைவு, அச்சம், இற்செறிப்பால் தலைவனை அடிக்கடி காணமுடியாத நிலை ஆகிய காரணங்கள் தலைவியை வருத்துகின்றன. தலைவன் களவை நீடிக்க விரும்புவதும், தலைவியும் தோழியும் களவைக் கற்பாக்க விரும்புவதும் இயற்கையாகிறது. இதனை,

> **மறைவொழுக்கத்தைச் சமுதாயப் பெருங்கண்கள் பார்த்து கொண்டிரா் சுற்றுப்புறக் குளவிகள் கொட்டாதுவிடா. எண்ண ஊசிகள் நுளையாது போகா, ஆதலின் காதற் களவுக்கு உலகில் புகலிடம் இல்லை. களவைக் கற்பாக்கினால் உலகிற்கு உறக்கம் இல்லை என்றும் காதலுக்குத் திருமணமின்றேல் சமுதாயத்துக்கு வாழ்வில்லை. ஆதலின் அகத்திணை கண்ட தமிழ்ச் சான்றோர் வரைவுத் துறைகளாய் இருப்பதற்கும் திருமணக் கொள்கையே ஏதுவாம். (வ. சுப. மாணிக்கனார்)**

என்ற கூற்று பொருந்தி வருகிறது.

**வெறியாட்டு**

களவொழுக்கத்தைத் தாய்க்கு வெளிப்படுத்தி அறத்தொடு நிற்கவும், தலைவனை வரைவு கடாவும் தோழி வெறியாட்டைக் கருவியாகக் கொள்கிறாள். வெறியாட்டை

> **சமுதாயச் சடங்குக்கும் கற்பொழுக்கத்துக்கும் இடையே நிகழும் போராட்டத்தைப் புலப்படுத்தும் முறையில் வெறியாட்டு என்னும் துறை அமைந்துள்ளது. …குறிஞ்சி நில மக்களிடத்து வெறியாட்டு என்னும் கூத்து மிகவும் பரவியிருந்தது. வெறி என்னும் சொல் தெய்வத்தைக் குறிப்பதாகும் (கலைக் களஞ்சியம் ப. 505)**

இவ்வாறு பகர்கிறது. தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கும்போது உண்மை உணர்த்தும் நோக்கத்தின் நிலைக்களனாக இது விளங்குகிறது. தலைவனுக்கு வெறியாடலைப் பற்றி உணர்த்தும்போது, வரைவுக்குத் தூண்டுகோலாக இருக்கிறது. இதனை,

> **பிறர்உறு விழுமம் பிறரும் நோப**
> **தம்உறு விழுமம் தமக்கோ தஞ்சம்**
> **கடம்பு கொடியாத்து, கண்ணி சூட்டி**
> **வேறுபல் குரல ஒருதூக்கு இன்இயம்**
> **காடுகெழு நெடுவேட் பாடுகொளைக்கு ஏற்ப,**

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**அணங்குஅயர் வியன்களம் பொலிய பையத்**
**தூங்குதல் புரிந்தனர் நமர்என, ஆங்குஅவற்கு**
**அறியக் கூறல் வேண்டும் (அகம்., 382)**

என்றப் பாடலில் தோழி, கடப்ப மரத்தில் கொடியினைச் சுட்டி, மாலை சூட்டி, தாளங்களின் வழிவரும் செந்தூக்கு முதலாகிய எழுவகைத் தூக்கினுள் ஒன்றினைப் பொருந்திய இனிய வாத்தியங்களைக் கொண்டு குறிஞ்சிநிலக் கடவுளாம் முருகனைப் பாடுகிறாள். பாட்டிற்குப் பொருந்த வெறியாட்டு அயர்கின்ற அகன்றகளம் அழகுறுமாறு, நம் அன்னை முதலிய நம்முடையவர்கள் மெல்ல வெறியாடுதலுக்கு விரும்பினர் என்னும் சேதியைத் தலைவனைக் காணுங்கால் நீ அவன் உணருமாறு எடுத்துக் கூற வேண்டும். அதுவே நிலைக்கத்தக்கது என்கிறாள். தலைவன் திருமணத்திற்கு முயலவில்லை. வெறியாடல் நிகழ உள்ளமையைத் தலைவனுக்கு வெளிப்படையாகக் கூறுகின்றனர். சூழ்நிலையின் அழுத்தத்தைத் தலைவன் நன்குணரவும் தலைவனை வரைவு கடாவும் ஒரு பொதுக் கருத்தைத் தோழி கூறுகிறாள். '**பிறருறு விழுமம் பிறரும் நோபத் தம்முறு விழுமம் தமக்கே தஞ்சம்**' என்பது அக்கருத்து. சான்றோர் தங்களுக்கு நேரும் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டாலும் பிறர்க்கு நேரும் துன்பத்திற்காக வருந்துவர் என்னும் பொதுகருத்து இவர்களது தனிக்கருத்தின் மாறிய வடிவமாகும். இதனைப் பெர்னாட்ஷா, "**திருமணம் தவிர்க்கமுடியாதது இன்றியாமையாதது இதனைப் புரிந்துகொண்டால் நயமும் பொருத்தமும் உடையதாகத் திருமணத்தை செய்ய முயல்வோம் என்கிறார்." (பெர்னாட்ஷா ப. 182)**

வெறியாட்டு, முருக வழிபாட்டைச் சார்ந்திருந்தாலும் களவில் மட்டுமே இவ்வழிபாடு இடம் பெறுகிறது. மேலும் இவ்வழிபாடு குறிஞ்சித் திணைக்கே சிறப்பாக அமைகிறது. தான் உண்மைநிலை ஆயினும் தோழி பற்றிய பெண்டிரையும் அச்சமின்றிக் காணுகிறாள். சற்று நேரத்தில் தலைவியும் வீடுசெல்ல முற்படுவாள். தோழியும் உடன்படுகிறாள். உண்மையில் தலைவியை அம்முடிவிற்கு வருமாறு தூண்டவே தோழி இவ்வாறு பேசுகிறாள் இதனை உளவியலார். துயரம் மிக்கச் சூழலில் உணர்வுப் பாதிப்பினின்று பிரிக்கப்பட்ட கருத்தை மட்டும் அறநிலையில் பேசும்போது ஒருவரால் உண்மை நிலையை ஒப்புக் கொள்வதை அல்லது தனது உள்துடிப்புகளுக்குப் பொறுப்பேற்றுக் கொள்வதைத் தவிர்க்க முடிகிறது. இந்நிலையில் அவரது உள்துடிப்புகள் அயன்மையான கருத்துகளாகவே கொள்ளப்படுகின்றன. ஆகவே அவற்றை அவர் உணர்வதே இல்லை என்னும் விளக்கத்திற்கு இத்தோழியின் எண்ணம் உரிய சான்றாகிறது.

**அறத்தொடு நிற்றல்**

தோழி தன்னுடைய அறிவுத்திறன் முழுவதையும் பயன்படுத்திச் செயற்படுவதற்குரிய பருவம் இது. அறத்தொடு நிற்றல் பயன்தருமா, உடன்போக்கே வேண்டப்படுவதா எனத் தலைவியின் தாய் தந்தையர் மனப்பாங்கையும், தலைவன் எண்ணத்தையும், பிறவற்றையும்

செவ்வனே சீர்தூக்கிப் பார்க்கும் திறன் தோழிக்கு உள்ளது. அறத்தொடு நிற்றல் என்னும் துறையில் தோழியின் பேச்சாற்றலும், அதனைப் புலப்படுத்தும் புலவர்களின் கற்பனைத் திறனும், சொல் வளமும் அற்புதமாகக் கூறுவதைச் சங்க இலக்கியத்தில் காணமுடிகிறது. இதனை, "**அறத்தொடுநிற்றல் என்னும் துறைகளைக் கற்பாக மாற்றுவதற்கான முயற்சியாகும். களவு கற்புஎன்னும் இரு கரைகளுக்கிடையே ஒரு பாலம் போல விளங்கும் இத்துறை, அகத்திணைத்துறைசார் அனைத்திலும் சிறப்புடையது." (இராம பெரியகருப்பன்)** என்று கூறுகிறார். உளவியல் நூலைப் படிக்காமலே அக்காலபுலவர்கள் தோழி வாழ்வுடன் ஒன்றி அடிப்படை மனநிலைகளைக் காட்டியிருப்பது பொரிதும் வியப்பிற்குரியது.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் தோழியின் ஆளுமை என்னும் இந்த ஆய்வுகளம் தோழியின் செயல் திறன் குறித்தும், தோழிக்கும் தலைவிக்கும் இடையேயுள்ள நுட்பமான அதே நேரத்தில் இன்பமும், துன்பமும் நடக்கின்ற வேளையில் தோழியின் பங்களிப்பை குறித்தும் வரைவு கடாதல், வேலனுக்கு வெறியாட்டு நிகழ்த்துதல், அறத்தொடு நிற்றல் ஆகிய மிக முக்கியமான தலைவியின் காலகட்டங்களில் தோழியின் ஆளுமைதிறன் எவ்வாறெல்லாம் வெளிப்படுகிறது என்பது இந்த ஆய்வின் வழி நாம் உணர்ந்து கொள்ளமுடிகிறது.

**குறிப்புகள்**

[1] மாணிக்கம், வ. சுப. *தமிழ் காதல்.* பாரி நிலையம்.சென்னை, 1962.

[2] சந்தியா நடராஜன், (ப.ஆ.). *மதுரை தமிழ்ப்பேரகராதி* - தொகுதி முதல் பாகம், சந்தியா பதிப்பகம், சென்னை. முதல் பதிப்பு - 2004.

[3] ஷா, ஜார்ஜ் பெர்னார்ட். *கெட்டிங் மாரிட்.* ப்ராஜெக்ட் குட்டன்பெர்க், 2013.

[4] ராபர்ட் பி. வைட், ராபர்ட் எம். கிளீவ்லேண்ட். *மனோதத்துவத்தின் கூறுகள்: பாதுகாப்பு வழிமுறைகள்.* க்ரூன் மற்றும் ஸ்ட்ராட்டன், 1975.

[5] பெரியகருப்பன், ராமசாமி. *சங்கம் கவிதையில் பாரம்பரியம் மற்றும் திறமை.* மதுரை பதிப்பகம், மதுரை, 1976.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.